பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

11 11 2024 **MONDAY** 6 30 **PM**

<u>வணக்கம் - மாநில செய்திகள்</u>
<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மின்னணு பொருட்களின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

2. நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் திரைப்படத்துறை முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. பள்ளிக் கல்வித்துறைக்கு இதுவரை இல்லாத அளவிற்கு 44 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணிநேரத்தில் உருவாகக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. **JVD** ஒப்பன் வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் **Jyothi Surekha Vennam** வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>><<<<

மின்னணு பொருட்களின் உற்பத்தியை அதிகரிப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக தொலைத்தொடர்புத் துறை அமைச்சர் திரு. ஜோதிராதித்ய சிந்தியா கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் நடைபெற்ற தெற்காசிய தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை குழுமத்தின் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

நாட்டில் செயல்பாட்டில் உள்ள 99 புள்ளி 3 சதவீத கைபேசிகள் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

>>>><<<<

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் திரைப்படத்துறை முக்கியப் பங்கு வகிப்பதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

கோவாவில் சர்வதேச திரைப்பட விழா வரும் 20ஆம் தேதி தொடங்கவுள்ளது குறித்து இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கோவா சர்வதேச திரைப்பட விழா, உலக அளவில் மிகப் பெரிய திரைப்பட விழாவாக திகழ்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த திரைப்பட விழாவிற்கான வரவேற்பு வெகுவாக அதிகரித்துள்ளதாகவும் திரு. எல். முருகன் கூறினார்.

இந்த செய்தியாளர் சந்திப்பின் போது பேசிய தகவல் ஒலிபரப்புத்துறை செயலர் திரு. **Sanjay Jaju,** இந்த விழாவில் சிறந்த அறிமுக இயக்குநருக்கான விருது இவ்வாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படுவதாக தெரிவித்தார்.

இந்த திரைப்பட விழாவிற்கான முக்கிய நாடாக ஆஸ்திரேலியா அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சத்யஜித்ரே வாழ்நாள் சாதனையாளர் விருது ஆஸ்திரேலிய திரைப்பட இயக்குநர் திரு. **Noyce**-க்கு வழங்கப்படும் என்றும் திரு. **Sanjay Jaju** தெரிவித்தார்.

**>>>><<<<**

பள்ளிக் கல்வித்துறைக்கு இதுவரை இல்லாத அளவிற்கு 44 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி கூறியுள்ளார்.

கோவை, கவுண்டம்பாளையம் குடியிருப்புப் பகுதியில் உள்ள மாநகராட்சி நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

மாநிலம் முழுவதும் பள்ளி கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்தார்.

>>>><<<<

இளையோருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரும் வகையில், திருவாரூர் மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்கப்படும் என்று மாநில தொழில்துறை அமைச்சர் திரு. டி.ஆர்.பி. ராஜா கூறியுள்ளார்.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி தெப்பக்குளத்தில் படகு இல்லம் அமைக்கும் பணியினை, இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் சுற்றுச்சூழலுக்கு உகந்த விவசாயம் சார்ந்த தொழிற்பேட்டை கொண்டுவரப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>><<<<

நாடுமுழுவதும் வேளாண் திட்டங்களை செயல்படுத்துவதற்காக நிலங்களின் தன்மை, சாகுபடி போன்ற விவரங்களை டிஜிட்டல் முறையில் தொகுக்கும் திட்டத்தில் வேளாண் கல்லூரி மாணவர்களை திமுக அரசு ஈடுபடுத்துவதாகவும், இது கண்டனத்திற்குரியது என்றும் அஇஅதிமுக பொதுச் செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த ஆய்வுப் பணிக்காக மத்திய அரசு ஒதுக்கிய நிதியை மாநில அரசு எவ்வாறு பயன்படுத்தப் போகிறது என்றும் வினவியுள்ளார்.

>>>><<<<

தமிழகத்தில் உள்ள அரசு தொடக்கப் பள்ளிகளில் 10 ஆயிரம் போலி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருவதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று பிஜேபி கூறியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த முறைகேட்டினை கண்டுகொள்ளாமல் இருப்பதற்காக சம்பந்தப்படட மாவட்ட கல்வி அலுவலர்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டுள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஈராசிரியர் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பணிக்கு வராமல், பிற நபர்களை வைத்து பாடம் கற்பிக்க வைத்து முறைகேடு நடைபெற்றுள்ளதாகவும் பிஜேபி அந்த அறிக்கையில் கூறியுள்ளது.

>>>><<<<

தமிழகத்தில் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கான பணிநியமன ஆணைகளை உடனடியாக வழங்க வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச. ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நிதி நெருக்கடி ஆசிரியர் நியமனத்தை பாதிக்கக்கூடாது என்று குறிப்பிட்டுள்ளார்.

இடைநிலை ஆசிரியர்களுக்கான போட்டித் தேர்வு முடிவுகளையும் மாநில அரசு விரைவில் வெளியிட வேண்டும் என்று திரு. ராமாதாசு அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>><<<<

வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணிநேரத்தில் உருவாக வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

(சவுண்ட் பைட்(1)-செந்தாமரைக்கண்ணன் 46 செகண்ட்ஸ்)

கடல்பகுதியில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால், மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் கேட்டுக் கொண்டார்.

(சவுண்ட் பைட்(2)-செந்தாமரைக்கண்ணன் 23 செகண்ட்ஸ்)

>>>><<<<

சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கான **Udyam** சான்று பெறுவதற்கான சிறப்பு முகாம் மார்ச் மாதம் வரை நடத்தப்படவுள்ளதாக தூத்துக்குடி மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் திருமதி. சொர்ணலதா கூறியுள்ளார்.

இன்று தூத்துக்குடியில் நடைபெற்ற இதுதொடர்பாக கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - சொர்ணலதா 44 செகண்ட்ஸ்)

>>>><<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை, செல்லூர் கண்மாயிலிருந்து நிரந்தர சிமெண்ட் கால்வாய் அமைக்கும் பணிகளை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி இன்று தொடங்கி வைத்தார்.

>>>><<<<

விருதுநகர் மாவட்டம், மறையூரில் உள்ள ராணி மங்கம்மா சத்திரத்தில் மாநில அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>><<<<

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு. பிரசாந்த் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>><<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில் கிணற்றில் தவறி விழுந்து உயிரிழந்த இளைஞரின் குடும்பத்தினருக்கான ஒரு லட்சம் ரூபாய் நிதியுதவியை ஆட்சியர் திரு. தர்பகராஜ் இன்று வழங்கினார்.

>>>><<<<

ஈரோடு மாவட்டம், அந்தியூர் அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

>>>><<<<

விளையாட்டுச் செய்திகள்

**JVD** ஓப்பன் வில்வித்தைப் போட்டியில் இந்தியாவின் **Jyothi Surekha Vennam** வெண்கலப்பதக்கம் வென்றார்.

நெதர்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>><<<<

பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான உலக துப்பாக்கிச் சுடும் போட்டியில், இந்தியா இன்று ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

புதுதில்லியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் பிரிவில் **Smit Ramesh Bhai Morabaya** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் குழுப் பிரிவில் இந்தியா வெண்கலப்பதக்கத்தை கைப்பற்றியது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 6 வெள்ளி, 2 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

>>>><<<<

போலந்தில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Deepanshu** பட்டம் வென்றார்.

>>>><<<<

ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப் போட்டியில், இந்தியா – மலேசியா இடையேயான ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது.

பீகாரின் **Rajgir**–ல் நடைபெற்று வரும் இப்போட்டியில் சற்றுமுன் வரை இந்தியா 3-0 என்ற கோல்கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

>>>><<<<

சென்னை மாஸ்டர்ஸ் செஸ் போட்டியின் இந்தியாவின் **Aravind Chidambaram** பட்டம் வென்றார்.

**>>>>END<<<<**